சுடர் ஒளி
THE SUDAR OLI
සුඩර් ඔළි
23.12.2020 புதன்கிழமை



## ஜனாஸா எரிப்புக்கு எதிராகப் போராட்டம்

கொழும்பு, டிசெ. 23
முஸ்லிம்களின் ஜனாஸாக்களை எரிக்கும் கோத்தா அரசின் தீர்மானத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் இன்று கவனவீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டனர். 2

# கோத்தபாய அரசின் ஊடக அடக்குமுறை

## பிரபாகரனின் ஒளிப்படம் பிரசுரித்தமைக்காக 'உதயனுக்கு' எதிராக வழக்குத் தாக்கல்

யாழ்ப்பாணம், டிசெம்பர் 23
இலங்கையில் தடை செய்யப்பட்ட அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்த நாளன்று அவரது ஒளிப்படத்தையும் சொற்களையும் வெளியிட்டமை தொடர்பில் 'உதயன்' பத்திரிகை மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.
யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் இந்த வழக்கு மார்ச் 21ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியால் இந்த விண்ணப்பம் 2

## முஸ்லிம்கள் மீது ஞானசாரருக்கு திடீர் பாசம்



கொழும்பு, டிசெ. 23
1983ஆம் ஆண்டு தமிழர்களோடு பிரச்சினை ஏற்படுத்தியதைப்போன்று தற்போது முஸ்லிம் மக்களின் ஜனாஸாக்களோடு மோதி அவ்வாறான ஒரு நிலைமையை ஏற்படுத்துகின்றார்கள்.
முட்டாள்தனமான அரசியல் செய்தால் 1983ஆம் ஆண்டு ஏற்பட்ட நிலையே மீண்டும் ஏற்படும். இவ்வாறு பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலர் ஞானசார தேரர்

## மதுபானசாலைகள் திறந்தேயிருக்கும்!

கொழும்பு, டிசெ. 23
பண்டிகைக் காலங்களில் மதுபான சாலைகளை மூடுவது தொடர்பில் எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை என்று மதுவரித்திணைக்கள ஆணையாளர் கபில குமாரசிங்க தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
பண்டிகைக் காலங்களில் மதுபான சாலைகளை மூடுமாறு சில குழுக் 2

### கொரோனா மூன்றாம் அலை

## பத்து வாரங்களில் 10 மடங்கு தொற்றாளர்கள்

கொழும்பு, டிசெ. 23
கொரோனா பரவலின் இரண்டாம் அலை ஆரம்பமாகி 10 வாரங்கள் ஆகின்றன.
ஒக்ரோபர் ஆரம்பத்தில் பதிவான தொற்றாளர்களின் எண்ணிக்கை கடந்த 10 வாரங்களுக்குள் பத்து மடங்காக அதிகரித்திருக்கின்றது. இவ்வாறு தேசிய புத்திஜீவிகள் அமைப்பின் செயலர் விசேட மருத்துவ நிபுணர் நிஹால் அபேசிங்க தெரிவித் 2

### பாணந்துறை

## ஆடைத்தொழிற்சாலையில் நூறு பேருக்குத் தொற்று

கொழும்பு, டிசெ. 23
பாணந்துறையில் பிரபல ஆடைத் தொழிற்சாலையில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 100ஆக அதிகரித்துள்ளது என அந்தப் பகுதி பொதுச் சுகாதார பரிசோ 2

## மரக்கறிக் கடைக்கு தீ வைத்த விசமிகள்

கொடிகாமம், டிசெ. 23
மந்துவில் கிழக்கு சின்னச் சந்தையிலுள்ள மரக்கறிக் கடைகள் தீயில் எரிந்துள்ளன.
விசமிகளால் தீ வைக்கப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் கூறுகின்றனர்.
இன்று அதிகாலை 12.30 மணியளவில் இந்தச் சம்பவம் நடைபெற் 2





## கஞ்சா வளர்த்தவர் கைது

வவுனியா, டிசெ. 23
வவுனியா போகஸ்வெளவில் கஞ்சா செடிகள் வளர்த்த சந்தேகத்தில் ஒருவரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
பொலிஸா 2

## பயந்தாங்கொள்ளி அரசு

### ஹக்கீம் கிண்டல்

கொழும்பு, டிசெ. 23
கோத்தா அரசு தற்போது கலக்கமடைந்துள்ளது. பொரளை மயானத்துக்கு முன்னால் உள்ள கம்பி வேலியில் வெள்ளைத் துணியைக் கட்டி அமைதியாக முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தைக்கூட ஒடுக்குவ 2

### இரணைதீவில்

## கடற்படையினர் கெடுபிடி: மக்கள் இன்று போராட்டம்

கிளிநொச்சி, டிசெ. 23
இரணைதீவுக்கு சிமெந்து உள்ளிட்ட பொருள்கள் எடுத்துச் செல்வதற்கு கடற்படையினர் அனுமதிப்பதில்லை. பெண்கள் இரணைதீவுக்குச் செல்லவும் கடற்படையினர் தடுத்து வருகின்றனர். இதற்கு தீர்வைப் பெற்றுத் தருமாறு கோரி பூநகரியில் இன்று காலை கவனவீர்ப்புப் பேரணி முன் 2

# முஸ்லிம்கள் மீது ....

தெரிவித்தார்.
இது தொடர்பில் ஊடகங்களுக்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
முஸ்லிம்களின் ஜனாஸா விடயத்தில் அரசு முட்டாள்தனமான தீர்மானம் மேற்கொள்கின்றது. ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தினதும் வெறுப்புக்கு நாம் ஆளாக வேண்டியுள்ளது. ஜனாஸா விடயம் தொடர்பில் ஆராய சிறப்புக் குழுவொன்றை நியமித்துள்ளனர். இதன் அங்கத்தவர்கள் யார்? இவர்களுடைய தகைமைகள் என்ன? முஸ்லிம்கள் சார்பான பிரதிநிதிகளின் கோரிக்கைகளை இந்தக் குழு அறிந்து கொள்ளவேண்டும். ஆனால் அவ்வாறான திட்டம் இருப்பதாகத் தெரியவில்லை.
கொரோனாவால் உயிரிழந்தவர்களின் ஜனாஸாக்களை எரிக்கச் சொல்கின்றனர். மற்றொரு சந்தர்ப்பத்தில் குளிரூட்டியில் வைக்கச் சொல்கின்றனர். இது எவ்வாறான நடைமுறை?
மண்ணிலிருந்து படைக்கப்பட்ட உயிர் மண்ணுக்கே உரமாக வேண்டும் என்பது முஸ்லிம்களின் நம்பிக்கை. இது அவர்களது மதம் சார்ந்த உரிமை.
முஸ்லிம்களின் ஜனாஸாக்களின் உடல்களை வைத்து அரசியல்செய்தால் இன்னமும் ஆயிரம் ஸஹ்ரான்கள் உருவாக்கப்படுவார்கள்.
நான் கடந்த 8 வருடங்களாக முஸ்லிம் அடிப்படைவாதம் எவ்வாறு வளர்ந்தது என்பது தொடர்பில் கூறுகின்றோம். அது தொடர்பாக எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.
தமிழ் மக்களின் பிரச்சினை தேசியப் பிரச்சினை. முஸ்லிம்களுடைய பிரச்சினை அவர்களது மதம் சார்ந்த உணர்வுபூர்வமான பிரச்சினை என்பதை நினைவில் வைத்திருங்கள் - என்றார். (ஒ,இ)

# கோத்தபாய அரசின் ஊடக அடக்குமுறை

தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
இலங்கையில் தடை செய்யப்பட்ட அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்த நாளான நவம்பர் 26ஆம் திகதி அவரது ஒளிப்படைத்தையும் சொற்களையும் பயன்படுத்தி பத்திரிகையில் வெளியிட்டமை 1979ஆம் ஆண்டு 48ஆம் இலக்க பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு உட்பட்டு தண்டனைக்குரிய குற்றம் புரியப்பட்டுள்ளது என்று விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.
இந்த விண்ணப்பம் டிசெம்பர் மாத ஆரம்பத்தில் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதனால் சந்தேக நபர் தொடர்பில் மன்றுக்கு அறிக்கையிடப்படும் என்று பொலிஸார் சமர்ப்பணம் செய்துள்ளனர். (ஒ,26)

## ஜனாஸா...

கொழும்பு பொரளைப் பொது மயானத்துக்கு முன்பாக இன்று மதியம் இந்த கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.
எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசா, நாடாளுமன்ற உறுப்பினர்களான ராஜித, ஹக்கீம், ரிசாத், எரான் விக்கிரமரத்ன, ஹர்ச டி சில்வா ஆகியோர் கலந்து கொண்டனர். (ஒ,இ)

## மதுபானசாலைகள்....

கள் ஊடகங்கள் மூலம் கோரிக்கைகள் விடுத்து வருகின்றன. அவர்கள் ஒன்றை விளங்கிக் கொள்ளவேண்டும்.
கொரோனா முதலாவது அலையின் போது மதுபான சாலைகள் மூடப்பட்டன. சட்டவிரோத மதுபான உற்பத்தி அதிகரித்தது. மதுபான சாலைகளை மீண்டும் மூடினால் சட்டவிரோத மதுபான உற்பத்தி மீண்டும் தலைதூக்கும்.
சுகாதார அமைச்சால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களுக்கு அமைவாக தனிமைப்படுத்தப்பட்ட மற்றும் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்ட பகுதிகளில் மதுபான சாலைகள் மூடப்பட்டுள்ளன. இந்தப் பகுதிகளைத் தவிர பண்டிகைக் காலங்களில் மதுபான சாலைகளை மூட எந்த நடவடிக்கையும் இல்லை, என்றார். (ஒ,இ)

## பயந்தாங்கொள்ளி....

தற்கு முற்பட்டது. துணிகள் கழற்றி எறியப்பட்டுள்ளதுடன், சிவில் உடையில் பாதுகாப்பு தரப்பினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அறவழி போராட்டங்களுக்குகூட இந்த அரசு அஞ்சுகின்றது என்பது புலனாகின்றது. இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.
கொழும்பு பொரளை பொது மயானத்துக்கு முன்பாக, முஸ்லிம்களின் ஜனாஸா எரிப்புக்கு எதிரான கவனவீர்ப்பு இன்று நண்பகல் இடம்பெற்றது.
இதில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
கொரோனா தாக்கத்தின் முதலாவது அலை உருவானபோது, தேர்தலும் நெருங்கியதால் அதனை கட்டுப்படுத்துவதற்கு அரசு அதிக அக்கறை காட்டியது. நாட்டு மக்களும் ஒத்துழைப்பு வழங்கினர். ஆனால் தேர்தலின் பின்னர் இரண்டாவது அலை உருவானபோது முன்பிருந்த அக்கறை இல்லை.
இரண்டாவது அலையால் வைரஸ் தொற்று மட்டுமல்ல சமூக, பொருளாதார மற்றும் இதர பிரச்சினைகளும் உருவாகியுள்ளன. இதில் ஓர் அங்கம் தான் முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினை.
முஸ்லிம்களின் ஜனாஸாக்களை மாலைதீவுக்கு அனுப்பும் முயற்சியை முன்னெடுத்து, தாம் செய்வது தவறுதான் என்பதனை அரசே இன்று ஏற்றுக்கொண்டுள்ளது. உலக சுகாதார அமைப்பு பரிந்துரைத்தும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்ய அனுமதிக்க மறுப்பது மறுத்தது வேதனைக்குரிய விடயமாகும்.
கொரோனாவால் உயிரிழக்கும் முஸ்லிம்களை அடக்கம் செய்யவேண்டும் என்ற கோரிக்கைக்கு விரைவில் உரிய தீர்வை எதிர்பார்க்கின்றோம். சாதகமான பதில் கிடைக்கும் என்று நம்புகின்றோம், என்றார். (ஒ,44)

## ஆடைத்தொழிற்சாலையில்....

தகர் சமன் கீகனகே தெரிவித்தள்ளார்.
இதனையடுத்து ஆடைத் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளது. தொழிற்சாலையில் ஆயிரத்துக்கும் அதிகமான ஊழியர்கள் பணியாற்றுகின்றனர். அவர்கள் அனைவரும் கட்டாய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (ஒ,இ)

## பத்து வாரங்களில்...

துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தொற்றாத நோய்களால் பாதிக்கப்பட்டிருப்பவர்களுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டால் அவர்கள் உயிரிழப்பதற்கான வாய்ப்புக்கள் உயர்வாக உள்ளன. அத்தகையவர்களை இனம் கண்டு, அவர்களுக்கு உரியவாறான சிகிச்சைகளை வழங்கி, உயிரிழப்புக்களைக் குறைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். தொடர்ச்சியாக அதிகரித்து வரும் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை மற்றும் உயிரிழப்புக்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் இது நாட்டில் மிகவேகமாகப் பரவிவருகின்றமையைப் புரிந்துகொள்ள முடிகின்றது, என்றார். (ஒ,இ)

## கடற்படையினர் கெடுபிடி....



னெடுக்கப்பட்டது.
தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது. யாழ்ப்பாணம் மன்னார் வீதி ஊடாக பூநகரி பிரதேச செயலகம் வரையில் சென்ற மக்கள், பூநகரி பிரதேச செயலர் எஸ். கிருஸ்ணேந்திரனிடம் மனுவைக் கையளித்தனர்.
'இரணைதீவுக்கு சிமெந்து உள்ளிட்ட பொருள்களை எடுத்துச் செல்ல கடற்படையினர் அனுமதிப்பதில்லை. பெண்கள் இரணைதீவுக்குச் செல்வதை கடற்படையினர் தடுத்து வருகின்றனர். இரணைதீவில் அமைக்கப்பட்ட மின்கம்பங்களை தமது பாதுகாப்பு தேவைகளுக்காக கடற்படையினர் பயன்படுத்தி வருகின்றனர். எமது தீவுக்கு சுதந்திரமாகச் சென்றுவர அனுமதிக்கவேண்டும்' என்று மக்கள் கோரிக்கை முன்வைத்தனர். (ஒ,214)

## மரக்கறி....

றுள்ளது.
சந்தையிலிருந்த மூன்று மரக்கறிக் கடைகள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன. இவற்றின் பெறுமதி ஒரு லட்சம் ரூபா என்று கூறப்படுகின்றது. மரக்கறி கள் மழை வெள்ளத்தில் அழிந்து தட்டுப்பாடாக உள்ள நிலைமையில் இவ்வாறான இழி செயலை விசமிகள் செய்தமை தொடர்பில் விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். கொடி காமம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஒ,159)

## கஞ்சா...

ருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் வீட்டுத் தோட்டத்தில் வளர்க்கப்பட்டு வந்த இரண்டு கஞ்சாசெடிகள் கைப்பற்றப்பட்டன என்றும் ஒருவரை சந்தேகத்தில் கைது செய்துள்ளோம் எனவும் பொலிஸார் கூறினர். (ஒ,ரி3)

# கொவிட்–19 விழிப்புணர்வுக்கு அமைச்சர் வாசுதேவ பாராட்டு!

கொழும்பு, டிசெ.23

கொரோனாத் தொற்றிலிருந்து நாட்டையும் மக்களையும் பாதுகாப்பதற்கு மனித அபிவிருத்தி ஸ்தாபனம் அரசுடன் இணைந்து முன்னெடுத்துச் செல்லும் விழிப்புணர்வு வேலைத் திட்டம் ஒரு சிறந்த எடுத்துக்காட்டான வேலைத் திட்டம் என்று நீர்பாசனத்துறை அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

மனித அபிவிருத்தி ஸ்தாபனத்தின் இரத்தினபுரி மாவட்ட கொவிட் விழிப்புணர்வு பிரச்சார வேலைத் திட்ட நிகழ்வில் கலந்து கொண்டு, கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது மனித அபிவிருத்தி ஸ்தாபனத்தின் கொவிட் விழிப்புணர்வு சம்பந்தமான இந்த வேலைத்திட்டமானது ஒரு சிறந்த வேலைத் திட்டமாகும். இந்த நிறுவனம் இவ்வாறான அறிவூட்டல்கள் மற்றும் விழிப்புணர்வூட்டல்களைச் செய்வதையிட்டு மகிழ்ச்சியடைவதோடு அவர்களுக்கு பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன் - என்றார். (ற-இ)

## அண்மித்த பாடசாலையில் கல்வி: கண்டியில் புதிய முயற்சி

கண்டி, டிசெ.23

அருகில் உள்ள பாடசாலைக்கு சென்று கல்வி கற்கும் முறை கண்டி மெனிக்திவெல பாடசாலையில் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கொரோனா நிலைமையை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அடுத்த வாரத்தில் கண்டி கல்வி வலயத்துக்கு உட்பட்ட கல்விப் பணிப்பாளர்களை அழைத்து ஏனைய பகுதிகளிலும் இந்த நடைமுறை கொண்டுவரப்படஉள்ளது என மாகாண ஆளுநர் லலித் யு கமகே, தெரிவித்துள்ளார். அதனடிப்படையில் எந்தவொரு பிள்ளைகளுக்கும் வீட்டுக்கு அருகில் உள்ள பாடசாலையில் கல்வி கற்கும் வாய்ப்புக் கிடைக்கும் என அவர் தெரிவித்துள்ளார். (வ-இ)

## மாத்தளையில் ஒரு பகுதி முடக்கம்!

மாத்தளை, டிசெ. 23

மாத்தளையில் இக்கல்ல மாவத்தை பகுதி இன்று புதன்கிழமை காலை முதல் மீண்டும் அமுலுக்கு வரும் வகையில் முடக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் 6 கொரோனாத் தொற்றாளர்கள் கடந்த 24 மணித்தியாலத்தில் இனங்காணப்பட்டுள்ளனர்.

மேலும், மாத்தளை மாநகரசபை பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இதுவரை இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 19 ஆக அதிகரித்துள்ளது என தெரிவிக்கப்பட்டது. (ரி5-இ)

## ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் 1,500 பேரிடம் வாக்குமூலங்கள்

கொழும்பு, டிசெ.23

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் இதுவரை ஆயிரத்து 500க்கும் அதிகமானோரிடம் வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன என அது தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி பொலிஸ் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தீவிரவாதத் தாக்குதலின் பின்னர் அது தொடர்பில் ஆராய்வதற்காக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் 2019 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி இந்த ஐவர் அடங்கிய ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. ஜனாதிபதி ஆணைக்குழுவின் பதவிக் காலம் இதுவரை இரண்டு சந்தர்ப்பங்களில் நீட்டிக்கப்பட்டுள்ள நிலையில், எதிர்வரும் ஜனவரி மாதம் 31 ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டுள்ளது. அதன்படி, பொலிஸ் பிரிவில் ஆயிரத்து 570 பேரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் அதில் 436 பேரிடம் ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

## கொழும்பு மருத்துவமனையிலும் இனி பி.சி.ஆர். பரிசோதனை

கொழும்பு, டிசெ.23

எதிர்காலத்தில் கொழும்பு தேசிய மருத்துவமனையிலும் பி.சி.ஆர். பரிசோதனையை மேற்கொள்ள முடியும் என தொற்று நோயியல் பிரிவின் தலைவர் விசேட மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கை இருதய மருத்துவர் சங்கத்தின் கோரிக்கைக்கு அமைய, ஹேமாஸ் நிறுவனம் கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு பிசிஆர் இயந்திரமொன்றை அன்பளிப்புச் செய்துள்ளது.

மினுவாங்கொட, பேலியகொட மற்றும் சிறைச்சாலை கொவிட் கொத்தணியின் எண்ணிக்கை 34 ஆயிரத்து 214 வரை அதிகரித்துள்ளது. பண்டிகைக் காலத்தில் மேல் மாகாணத்திலிருந்து வெளியேறுவதை பொதுமக்கள் முடிந்தளவு கட்டுப்படுத்திக் கொள்ளவேண்டும் - என்றார். (வ-இ)

## மழையுடனான வானிலை வடக்கு கிழக்கில் நிலவும்

கொழும்பு, டிசெ.23

எதிர்வரும் நாள்களிலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மழையுடனான வானிலை நிலவும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. மழையுடனான வானிலையால், நீர்ப்பாசன திணைக்களத்துக்கு உரித்தான நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் அதிகரித்துள்ளது. இராஜாங்கனை, தெதுருஓயா மற்றும் களுகல்ஓயா நீர்த்தேக்கங்களில் சில வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன என திணைக்களத்தின் நீர் முகாமைத்துவ பணிப்பாளர், பொறியியலாளர் டி. அபேசிறிவர்தன தெரிவித்துள்ளார்.

நிலவும் சீரற்ற வானிலையால் வடக்கு, கிழக்கு மத்திய, வடமேல், ஊவா, வட மத்திய மாகாணங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த மாகாணங்களில் வசிக்கும் 2,623 குடும்பங்களை சேர்ந்த 8,021 பேர் தொடர் மழையால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதுவரை ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் நால்வர் காணாமல் போயுள்ளனர் என இடர்முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது. (வ-இ)



மிருசுவில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்தில் கல்வி கற்கும் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு திருமதி நந்தினி எழுதிய பாவிசை என்னும் சிறுவர் பாடல் நூல்கள் இன்று திங்கட்கிழமை வழங்கப்பட்டன. (ரி5-9)

# அரசமைப்பின் ஊடாக சுற்றுச்சூழலைப் பாதுகாக்குக!

பேராயர் கர்த்தினால் கோரிக்கை

கொழும்பு, டிசெ.23

காடுகளைப் பாதுகாக்கும் திட்டமொன்றை அரசியலமைப்பின் பிரகாரம் உருவாக்கத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும் என பேராயர் கர்த்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை கோரிக்கை விடுத்துள்ளார். கிறிஸ்துமஸ் வாழ்த்துத் தெரிவிக்கும் வகையில் பேராயரை அவரது இல்லத்தில் வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்தன நேற்றுச் சந்தித்தார். இதன் போதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார். சுற்றுச்சூழல் அமைப்பு முறைமை பாதுகாக்கப்பட்டால், நாட்டின் நீர்வளமானது எதிர்காலத்தில் நாட்டின் முக்கிய வருமான ஆதாரமாக மாறும். தாவரங்களை அழிப்பவர்களை கடுமையாக தண்டிப்பதற்கான சட்டங்கள் இயற்றப்பட வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் நாட்டின் சுற்றுச்சூழல் அமைப்பைப் பாதுகாக்க முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (வ-இ)

# நாட்டில் தெங்கு உற்பத்தியை அதிகரிப்பதில் அரசு கவனம்

கொழும்பு, டிசெ.23



நுகர்வோர் அதிகார சபையால் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின் போது நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் தேங்காயெண்ணெயில் 70 சதவீதம் வேறு பொருள்கள் கலப்படம் செய்யப்பட்டுள்ளன என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து நாட்டில் தெங்கு உற்பத்தியை அதிகரிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய, உள்ளூர் தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் தேங்காய் எண்ணெய்க்குப் பதிலாக துண்டுகளாக்கப்பட்ட உலர் தேங்காயை இறக்குமதி செய்தல், அதனை அரசுக்குச் சொந்தமான பீ.சீ.சீ. நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளல், தேங்காய் எண்ணெயில் பாம் எண்ணெய் அல்லது வேறு எண்ணெய் வகைகளைக் கலப்படம் செய்து விற்பனை செய்தலை முற்றாகத் தடை செய்தல், நாட்டில் தேங்காய் எண்ணெய் பாவனையை ஊக்குவித்தல், தூய்மையாக்கப்பட்ட பாம் எண்ணெயை மாத்திரம் இறக்குமதி செய்ய அனுமதி வழங்கல், தெங்கு உற்பத்தியாளர்கள் பெற்றுக்கொண்டுள்ள கடன்தொகையை மீளச் செலுத்த சலுகைகள் வழங்கல், ஊடுபயிர்ச் செய்கை, பால் உற்பத்திக்கான கால்நடை வளர்ப்பு மற்றும் நீர் வழங்கல் போன்ற தெங்குப் பயிர்ச் செய்கையின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கிலான சலுகை பொதிகளை அறிமுகம் செய்தல், இந்த நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தி கண்காணிக்க ஏற்புடைய அமைச்சு மற்றும் நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி அமைச்சின் உள்ளக செயலணி ஒன்றை அமைத்தல் ஆகிய யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கிகாரம் அளித்துள்ளது. (வ-இ)

# மதுபோதையில் சாரத்தியம்; கண்காணிப்பதற்கு உபகரணம்

கொழும்பு, டிசெ. 22

மதுபோதையில் வாகனங்களை செலுத்தும் சாரதிகள் தொடர்பில் கண்காணிப்பதற்காக 494 பொலிஸ் நிலையங்களுக்கு ஒரு லட்சத்து 30 ஆயிரம் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித்ரோஹன தெரிவித்தார்.

இதன்போது மதுபோதையிலும், அதிக வேகமாகவும், கவனக்குறைவாகவும் வாகனங்களை செலுத்தும் சாரதிகளைக் கைது செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

போதையில் வாகனம் செலுத்தி கைது செய்யப்படும் சாரதிகள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதுடன், அவர்கள் செலுத்திய வாகனங்களும் வழக்கு பொருளாக பதிவு செய்யப்படும்.

இந்நிலையில் குற்றம் நிரூபிக்கப்படும் ஒவ்வொரு சாரதிகளையும் சிறையில் வைக்கவோ, அபராதம் விதிக்கவோ அனுமதியுள்ளதுடன், அவர்களது சாரதி அனுமதிப்பத்திரத்தை இரத்து செய்யவோ அல்லது தற்காலிக தடை உத்தரவோ விதிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ரி5-இ)



மக்களால் ஒன்றிணைந்த மீள்எழுச்சித் திட்டத்தின் ஊடாக முல்லைத்தீவு வித்தியானந்தக் கல்லூரிக்கு அருணாசலம் கஜீபனின் நிதி அனுசரணையில் நோய்த் தொற்றுக்களில் இருந்து மாணவரைப் பாதுகாத்து கொள்வதற்கான கைகழுவும் பொறித்தொகுதி ஒன்று சுசீலன் பவுன்டேசன் ஊடாக வழங்கப்பட்டது. (ச-222)

# 120 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதி

சாவகச்சேரி, டிசெ. 23

சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட 120 குடும்பங்களுக்கு நேற்று செவ்வாய்க்கிழமை உலர் உணவுப் பொதிகளை சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் வழங்கினர்.

சாவகச்சேரி, கொடிகாமம், கைதடி ஆகிய பிரதேசங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இதுவரை எந்தவொரு உதவிகளும் கிடைக்காத குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. (ரி5-9)

# ஈஸ்டர் தாக்குதல் குறித்த விசாரணைக் காலம் நீடிப்பு

கொழும்பு, டிசெ. 22

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வரும் ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கான கால அவகாசம் எதிர்வரும் ஜனவரி மாதம் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த 20ஆம் திகதியுடன் குறித்த ஆணைக்குழுவின் காலம் முடிவடைந்ததோடு, தொடர்ந்தும் விசாரணைகள் முடிவடையாத நிலையிலே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது. (ரி5-இ)

# கிழக்கு முனைய விற்பனைக்கு சுதந்திரக் கட்சி கடும் எதிர்ப்பு

கொழும்பு, டிசெ.23

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் விற்பனை செய்யப்படுவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எதிர்ப்பு வெளியிட்டுள்ளது. இது தொடர்பில் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளதாவது: கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் எம்மால் உருவாக்கப்பட்டது.

முனையத்தை வேறு நாட்டுக்கோ, முதலீட்டாளர்களுக்கோ வழங்குவதை எதிர்க்கின்றோம். தேவை என்றால் அவர்கள் தெற்கு முனையத்தில் முதலீடு செய்ய முடியும். இது தொடர்பில் எடுக்க வேண்டிய சகல நடவடிக்கைகள் பற்றி ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்த உள்ளோம் எனத் தெரிவித்துள்ளார். (வ-இ)

# மாற்றுத்திறனாளிகள் தினம் மாந்தையில் கடைப்பிடிப்பு

முல்லைத்தீவு, டிசெ.23

முல்லைத்தீவு மாந்தை கிழக்கிலுள்ள மாற்றுத்திறனாளிகளின் அமைப்பின் ஏற்பாட்டில் ‘அனைத்து குறைபாடுகளும் கண்ணுக்குப் புலப்படுவதில்லை’ என்ற தொனிப்பொருளில் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் நேற்று 22ஆம் திகதி நடைபெற்றது.

அமைப்பின் தலைவர் த.சிவனடியான் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வேள்ட் விசன் நிறுவனத்தின் வடக்கு மாகாண செயற்பாட்டு முகாமையாளர் கு.பிரதீபன், மாந்தை கிழக்கு இணைப்பாளர் வ.வாகீசன், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் மாற்றுத்திறனாளிகளின் பிள்ளைகளின் வரவேற்பு நடனம், மாற்றுத்திறனாளிகளால் பாடல்கள், கவிதை, நாடகம் என்பன நடத்தப்பட்டமையுடன் வேள்ட் விசன் நிறுவனத்தின் நிதி உதவியில் மாற்றுத்திறனாளிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் மற்றும் அவர்களின் பிள்ளைகள் என 150 பேருக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன. (ச-19)





# முல்லைத்தீவில் வெடிபொருள்கள் மீட்பு

முல்லைத்தீவு, டிசெ.23

முல்லைத்தீவு சிலாவத்தை பகுதியில் உள்ள வெற்றுக் காணி ஒன்றிலிருந்து கைக்குண்டு மற்றும் மோட்டார் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவுப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து சிலாவத்தை பகுதிக்கு விரைந்த பொலிஸார் வெடிக்காத நிலையில் உள்ள கைக்குண்டு மற்றும் மோட்டார் குண்டை மீட்டுள்ளனர். நீதிமன்ற உத்தரவு பெறப்பட்டு சிறப்பு அதிரடிப்படையிடம் இவை ஒப்படைக்கப்படவுள்ளன என முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-19)

# கொரோனாத் தடுப்பூசிக்கு லலித் வீரதுங்க பொறுப்பு

கொழும்பு, டிசெ. 23

இலங்கைக்கு கொரோனா தடுப்பூசிகளை இறக்குமதி செய்யும் செயன்முறையை மேற்கொள்ளும் அதிகாரம் ஜனாதிபதியின் ஆலோசகர் லலித் வீரதுங்கவுக்கு வழங்கப்பட்டுள்ளது. முழுமையான ஆய்வுக்குப் பின்னர் தடுப்பூசிகளைக் கொண்டுவர உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுகாதார அதிகாரிகளுடன் பேச்சு நடத்தவும் அவருக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. (ஒ,இ)





மிருசுவில் அ.த.க. பாடசாலையில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு அதிபர் க.கஜேந்திரன் தலைமையில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை பாடசாலை மண்டபத்தில் இடம் பெற்றது.

நிகழ்வில் 100 புள்ளிகளுக்கு மேல் சித்தி பெற்ற மாணவர்களுக்கு பதக்கம் அணிவித்து நினைவுப் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (ரி5-159)

# விதிகளை மீறிய 30 பேர் கைது!

கொழும்பு, டிசெ. 23

தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறிய குற்றச்சாட்டில் கடந்த 24 மணித்தியாலத்தில் 30 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முகக்கவசம் அணியாமை, சமூக இடைவெளியைக் கடைப்பிடிக்காமை உள்ளிட்ட தனிமைப்படுத்தல் விதிகளை மீறியமையாலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ரி5-இ)

## தனியார் கல்வி நிலையங்களை

# ஆரம்பிப்பதா? இல்லையா? ஜனவரி 25க்கு பின்பே முடிவு

கொழும்பு, டிசெ.23



தனியார் கல்வி நிலையங்களை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பில் எதிர்வரும் ஜனவரி மாதம் 25 ஆம் திகதிக்கு பின்னர் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என கல்வி அமைச்சர் ஜி எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சுகாதார அதிகாரிகளின் பரிந்துரைகளை அடுத்து அனைத்து தனியார் கல்வி நிலையங்களையும் மீண்டும் திறப்பதை சில நாள்களுக்கு ஒத்திவைக்க அமைச்சு முடிவு செய்துள்ளது.

தனியார் கல்வி நிலையங்களில் சமூக இடைவெளி கடைப்பிடிக்கமாட்டாது என்பதை அடிப்படையாக வைத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)





# மதிப்பளிப்பு நிகழ்வு

கிளிநொச்சி, டிசெ.23

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் இல 01 பாடசாலையின் தரம் -05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் 21ஆம் திகதி பாடசாலை அதிபர் திருமதி ரவீந்திரன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.கமலராஜன், கரைச்சிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.தர்மரட்ணம் மற்றும் ஓய்வுநிலை கிராம அலுவலர் எஸ்.மகேந்திரன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டு மாணவர்களுக்கு மதிப்பளித்தனர். (ச-ரி2)





கிளிநொச்சி விவேகானந்தா வித்தியாலயத்தில் சேவையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று நடைபெற்றது. (ரி5-222)

# திருமலை மாவட்டத்தில் 33 பேருக்கு கொரோனா!

திருகோணமலை, டிசெ.23

திருகோணமலை மற்றும் மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்குட்பட்ட பகுதிகளில் 33 கொரோனாத் தொற்றாளர்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர் என்று திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வீ. பிரேமானந் தெரிவித்தார்.

நேற்று மாலை வரை இடம் பெற்ற அன்டிஜென் பரிசோதனை மூலமே தொற்று உறுதி செய்யப்பட்டது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். அந்தவகையில், திருகோணமலை ஜமாலியாவில் நான்கு மாணவர் உட்பட 12 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

திருகோணமலை நகரசபை தீயணைப்புப் படை வீரர்கள் மூவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் திருகோணமலை நகரில் வசித்து வரும் தீயணைப்புப் படை வீரர் ஒருவரின் தாய், தந்தைக்கும் தொற்று உறுதிபடுத்தப்பட்டது. மேலும் மூதூரில் இருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்றும் 49 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு பரிசோதனை மேற்கொண்ட நிலையில் 10 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-40)

# மாஸ்க் அணியாத 50 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர்

கம்பளை, டிசெ. 23

முகக்கவசம் அணியாது கம்பளை நகரிலுள்ள பள்ளிவாசலில் தொழுகையில் ஈடுபட்ட 50 பேரை, சுயதனிமைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தொழுகையில் ஈடுபட்டோரில் ஒருவர் கொரோனாத் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ளதையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஒ,இ)

# கொழும்பிலிருந்து செல்வோருக்கு இன்று 11 இடங்களில் சோதனை!!

கொழும்பு, டிசெ.23

மேல் மாகாணத்தில் இருந்து வெளியேறும் அனைத்து வீதிகளையும் உள்ளடக்கியவாறு இன்று முதல் 11 இடங்களில் அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

பொலிஸ் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அதிவேக வீதிகளில் இருந்து வெளியேறும் பகுதிகளிலும் ரெபிட் அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது. பண்டிகை கொண்டாடுவதற்காக மேல் மாகாணத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்குச் செல்வோரைத் தடுக்கும் நோக்கில் இந்தப் பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது.(ற-இ)

# மண்சரிவு அபாயத்தால் 7 குடும்பங்கள் இடம்பெயர்வு!

நுவரெலியா, டிசெ.23

நுவரெலியா பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதியில் பெய்து வரும் மழையால் கந்தபளை தோட்டம் கொன்கோடியா மத்திய பிரிவில் மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளது. அங்கிருந்த 7 குடும்பங்களைச் சேர்ந்த 33 பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

இந்த 33 பேரும் கொன்கோடியா தமிழ் வித்தியாலயத்தில் தற்காலிகமாகத் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான உலர் உணவுப் பொருள்கள் நுவரெலியா பிரதேச செயலகத்தின் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தப் பகுதி மக்கள் கடந்த 10 வருட காலங்களாக மண்சரிவு அபாயத்துக்குள்ளாகி வருகின்றனர். பாதிக்கப்பட்ட மக்கள் தங்களைப் பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் அமைச்சர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-இ)



# 2,125 கிலோ மஞ்சள் மீட்பு!

கொழும்பு, டிசெ.23

மாம்புரி பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 2 ஆயிரத்து 125 கிலோ கிராம் மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பில் சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிலாபம் பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய, நுரைச்சோலை பொலிஸாருடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் 67 பொலித்தீன் உறைகளில் அடைக்கப்பட்ட 2 ஆயிரத்து 125 கிலோகிராம் உலர்ந்த மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளது. (ற-இ)

# வௌவாலுக்கு சூடு சிக்கினார் தாதி

மட்டக்களப்பு, டிசெ. 23

மட்டக்களப்பு கண்ணகி அம்மன் கோவில் 3ஆம் குறுக்கு வீதியில் தாதி ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

பறவைகளை சுடும் துப்பாக்கி மூலம் நேற்று இரவு 9.30 மணியளவில் அவர் சுடப்பட்டுள்ளார் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

மரத்திலிருந்த வௌவால் மீது சந்தேக நபர் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார்.

சத்தம் கேட்டு எதிர் வீட்டிலிருந்து தாதி வெளியில் வந்துள்ளார். அவர் மீது குண்டு பாய்ந்தது. படுகாயமடைந்த தாதி உடனடியாக மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சந்தேகநபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ஒ,-150)

# கொவிட் தடுப்பூசி வழங்கல்: ஐ.நா. இலங்கைக்கு உறுதி!!

கொழும்பு, டிசெ.23

கொவிட்-19 தடுப்பூசிகளை வழங்குதல் மற்றும் நிர்வகிப்பதற்கான ஆதரவு பெற்றுத் தரப்படும் என ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகள் இலங்கைக்கு உறுதிஅளித்துள்ளனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்சவுடன் அலரி மாளிகையில் இடம்பெற்ற விசேட சந்திப்பின் போதே ஐ.நா. பிரதிநிதிகள் இவ்வாறு உறுதியளித்துள்ளனர்.

இந்தச் சவால் மிகுந்த காலப்பகுதியில் பல நாடுகள் தடுப்பூசிகளை வழங்க ஆரம்பித்துள்ள நிலையில், இலங்கைக்குத் தடுப்பூசியை வழங்குவது தொடர்பில் ஆதரவு வழங்குவதற்கு மிகுந்த கடப்பாட்டுடன் இருக்கின்றோம் என்று ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் குறிப்பிட் டார்.

பெருந்தொகையான தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ளும் போது அவை கிடைத்தவுடன் பயன்படுத்துதல் மற்றும் நிர்வகிப்பதற்கு இலங்கையின் அணுகுமுறை குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகள் மற்றும் அரச பிரதிநிதிகள் இடையே இதன்போது உடன்பாடு எட்டப்பட்டது.(ற-இ)

# சிசுக் கடத்தல்: கைதானவருக்கு பிணை!

கொழும்பு, டிசெ.23

30 சிசுக்களை விற்பனை செய்த குற்றச்சாட்டில் தெஹிவளைப் பிரதேசத்தில் வைத்து நேற்று ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்டவர் இன்று மொரட்டுவ நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில், இரண்டு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் ஜனவரி மாதம் 4 ஆம் திகதி இவரை மீண்டும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த வேண்டும் என்று நீதிவான் இதன்போது உத்தரவிட்டுள்ளார். (ற-இ)



# சந்தை வியாபாரிகளுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள்

வவுனியா, டிசெ. 23

வவுனியாவில் மரக்கறிச் சந்தை வியாபாரிகளுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இன்று மேற்கொள்ளப்பட்டன.

கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டு வரும் நிலையில், வவுனியாவிலும் பல தொற்றாளர்கள் இனங்காணப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் வவுனியா வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் நூற்றுக்கும் அதிகமான மொத்த விற்பனை மரக்கறி வியாபாரிகளுக்கு இன்று புதன்கிழமை பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ரி5-ரி3)

# தகனம் செய்யும் தீர்மானமும் விஞ்ஞான அடிப்படையற்றது

## கரு ஜயசூரிய சாடல்

கொழும்பு, டிசெ.23

கொரோனாவால் உயிரிழப்போரின் சடலங்களைக் தகனம் செய்யும் தீர்மானம் எவ்வித விஞ்ஞான அடிப்படைகளும் அற்றது. அதனால் எவ்வித பயனுமில்லை என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார். இந்த விவகாரம் அவரது ருவிற்றர் பக்கத்தில் இட்ட பதிவிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்களை அடக்கம் செய்வதற்கு எதிரான இலங்கை அரசாங்கத்தின் கொள்கை, உலக சுகாதார ஸ்தாபனத்தின் சுகாதார வழிகாட்டல்களுக்கு முற்றிலும் முரணானதாகும். இதுவிடயத்தில் அரசாங்கம் கொண்டுள்ள நிலைப்பாட் டின் பயனற்றதன்மை தொடர்பில் பேராசிரியர் மலிக் பீரிஸூம் சுட்டிக்காட்டியிருந்தார்.

ஆகவே இவ்விவகாரத்தில் விஞ்ஞானபூர்வ மாக முடிவொன்றுக்கு வருவதுடன், இலங்கைவாழ் முஸ்லிம்களுக்கு விரைவான தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என்று அவர் அதில் குறிப்பிட்டுள்ளார். (வ-இ)

# ஆப்கனில் குண்டுவெடிப்பு: நான்கு மருத்துவர்கள் சாவு

காபூல், டிசெ. 23



ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்பில் நான்கு மருத்துவர்கள் உட்பட ஐவர் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தான் சிறையில் நூற்றுக்கணக்கான தலிபன் கைதிகளுடன் பணிபுரிந்த நான்கு மருத்துவர்களே இந்தக் குண்டு வெடிப்பில் உயிரிழந்துள்ளனர். காபூலின் கிழக்கு புறநகரில் அமைந்துள்ள புல்இசர்கி சிறைக்கு மருத்துவர்கள் சென்று கொண்டிந்தபோதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது என ஆப்கானிய பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர். இந்த குண்டு வெடிப்பு காரணமாக மேலும் இருவர் காயமடைந்தும் உள்ளனர். (ம-வ-இ)




# சிட்னி நகர் முடங்கியது

கான்பெரா, டிசெ. 23

ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் கொரோனாத் தொற்றுப் பரவல் அதிகரித்ததையடுத்து அந்த நகர குடியிருப்பாளர்கள் உள்நுழைவதற்கு பிற மாநிலங்கள் தடை விதித்துள்ளன.

சிட்னி விமான நிலையத்தில் இருந்து புறப்படும் பல விமானங்கள் நேற்று ரத்துச் செய்யப்பட்டன. சிட்னியில் 83 புதிய நோய்த் தொற்று சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இவை அனைத்தும் நோர்தன் பீச்சஸ் பகுதியுடன் தொடர்புபட்டுள்ளன. இந்த நிலையில் விக்டோரியா மற்றும் குவீன்ஸ்லாந்து மாநிலங்கள் சிட்னியி லிருந்து வருவோருக்குப் பயணத் தடைகளை அறிவித்துள்ளன. மற்ற மாநிலங்கள் 14 நாள் தனிமைப்படுத்திக்கொள்ள உத்தரவிட்டுள்ளன. (ம-வஇ)

# தென்னாபிரிக்காவிலும் புதியவகைக் கொரோனா

## விமானங்களுக்குத் தடை

ஜோகன்ஸ்பேர்க், டிசெ. 23

தென்னாபிரிக்காவிலும் உருமாறிய புதிய வகை கொரோனா வைரஸ் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து ஐந்து நாடுகள் தென்னாபிரிக்காவிலிருந்து வரும் விமானங்களுக்கு தடை விதித்திதுள்ளன. அதன்படி, ஜேர்மனி, துருக்கி, இஸ்ரேல், சுவிட்சர்லாந்து மற்றும் சவூதி அரேபியா ஆகிய நாடுகள் தென்னாபிரிக்காவிலிருந்து வரும் விமான சேவைகளுக்கு தடையை அறிவித்துள்ளன. (ம-வஇ)



# 33 வினாடிக்கு ஓர் உயிர் காவு

நியூயோர்க், டிசெ. 23

33 வினாடிகளுக்கு ஒரு கொரோனா உயிரிழப்பு கடந்த வாரம் அமெரிக்காவில் பதிவாகியுள்ளது எனத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

தனியார் மருத்துவமனை ஒன்று வெளியிட்டுள்ள ஆய்வுத் தகவலிலேயே இந்த விடயம் தெரிய வந்துள்ளது. அங்கு கடந்த 20ஆம் திகதியுடன் நிறைவடைந்த கடந்த ஏழு நாள்களில் மாத்திரம் 18ஆயிரம் பேர் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர். வருட இறுதி விடுமுறை யில் பயணங்களைத் தவிர்க்குமாறு சுகாதார தரப்பினர் அறிவித்தும், கடந்த வார இறுதி நாள்களில் 3.2 மில்லியன் பேர் அமெரிக்க விமான நிலையங்களுக்கு சென்றுள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது. (ம-வஇ)



பாகிஸ்தானுக்கு எதிரான

# பெண் செயற்பாட்டாளர் மர்ம முறையில் இறப்பு

ஒட்டோவா, டிசெ. 23

பாகிஸ்தான் இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்கு எதிராகக் குரல் கொடுத்த பலுசிஸ்தானைச் சேர்ந்த சமூக ஆர்வலர் கரிமா பலூச் கனடாவில் மர்மமான முறையில் உயிரிழந்தார்.

பலுசிஸ்தானில் பாகிஸ்தான் ராணுவம் நடத்தும் அடக்குமுறைகளுக்கு எதிராக அம்மாகாணத் தலைவர்கள் பலரும் பல ஆண்டுகளாகப் போராடி வருகின்றனர். கரிமா பலூச்சும் பாகிஸ்தானின் ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக சர்வதேச அளவில் குரல் கொடுத்து வந்தார். இதற்காக கடந்த 2016ஆம் ஆண்டு பிபிசி வெளியிட்ட சக்தி வாய்ந்த பெண்கள் பட்டியலிலும் அவர் இடம்பிடித்திருந்தார். கடந்த சில ஆண்டுகளாக கனடாவில் வாழ்ந்து வந்த அவர் மர்மான முறையில் அருவி ஒன்றுக்கு அருகில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவரது மரணம் தொடர்பில் வெளிப்படையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என அம்னெஸ்டி இன்டர்நஷனல் அமைப்பு கோரியுள்ளது. அவரது மரணத்துக்காக பலுசிஸ்தான் தேசிய இயக்கம் 40 நாள்கள் துக்க தினமாக அறிவித்துள்ளது. (ம-வஇ)

# புதைக்கப்பட்ட மிங்களை தோண்டியெடுக்க உத்தரவு

கொழும்பு, டிசெ. 23



டென்மார்க்கில் கொரோனா அச்சம் காரணமாக கொன்று புதைக்கப்பட்ட மிங்க் வகை கீரிகளை மீண்டும் தோண்டியெடுக்க உத்தரவிடப்பட்டுள்ளது. டென்மார்க்கில் கடந்த மாதம் சுமார் 17 மில்லியன் மிங்களைக் கொல்ல உத்தரவிடப்பட்டது. அவை அவசர அவசரமாகப் புதைக்கப்பட்டதால் சடலங்களில் இருந்து மிகையான துர்நாற்றம் வீச ஆரம்பித்துள்ளது. அத்துடன் சடலங்கள் புதைக்கப்பட்டுள்ள புதைகுழிக்கு அருகில் நன்நீர் ஏரியொன்றும் உள்ளது. இதையடுத்து சடலங்களை மீண்டும் வெளியே எடுத்து எரியூட்டி அழிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (ம-வஇ)




# பாகிஸ்தானுக்கு ஆறுதல் வெற்றி!

ரி–20 தொடரை வென்றது நியூஸிலாந்து!

வெலிங்டன், டிசெ.23

நியூஸிலாந்து அணிக்கெதிரான மூன்றாவதும் இறுதியுமான ரி:20 போட்டியில், பாகிஸ்தான் அணி 4 இலக்குகளால் ஆறுதல் வெற்றியைப் பெற்றது.

இந்தப் போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றிபெற்றிருந்தாலும், மூன்று போட்டிகள் கொண்ட தொடரை 2:1 என்ற கணக்கில் நியூஸிலாந்து அணி கைப்பற்றியது.

நேபியர் மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில், நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி, முதலில் பந்துவீச்சைத் தெரிவு செய்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகள் இழப்புக்கு 173 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. கோன்வே 63 ஓட்டங்களையும் டிம் செய்பர்ட் 35 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சில், பாஹீம் அஷ்ரப் 3 இலக்குகளையும் ஹரிஸ் ரவூப் மற்றும் ஷாயின் அப்ரிடி ஆகியோர் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர். 174 என்ற வெற்றி இலக்கை நோக்கிப் பதிலுக்குக் களமிறங்கிய பாகிஸ்தான் அணி, 19.4 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகள் இழப்புக்கு வெற்றி இலக்கை அடைந்து, 4 இலக்குகளால் வெற்றிபெற்றது. மொஹமட் ரிஸ்வான் 89 ஓட்டங்களையும் மொஹமட் ஹபீஸ் 41 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

நியூஸிலாந்து அணியின் பந்துவீச்சில், டிம் சவுத்தி மற்றும் ஸ்கொட் குக்லெய்ன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் கெய்ல் ஜேமீசன் மற்றும் ஜேம்ஸ் நீஷம் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (ற-இ)




# ஸ்கொர்சர்ஸை வீழ்த்தி சிட்னி தண்டர் வெற்றி!

கான்பெரா, டிசெ.23

பிக் பேஷ் ரி20 தொடரின் 12 ஆவது லீக் போட்டியில், சிட்னி தண்டர் அணி 7 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

கன்பெரா மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில், சிட்னி தண்டர் அணியும், பெர்த் ஸ்கொர்சர்ஸ் அணியும் மோதின.

இந்தப் போட்டியில், நாணயச்சுழற்சியில் வெற்றிபெற சிட்னி தண்டர் அணி, முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பெர்த் ஸ்கொர்சர்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துபரிமாற்றங்களில் 5 இலக்குகள் இழப்புக்கு 152 ஓட்டங்களைப் பெற்றது. மிட்செல் மார்ஷ் ஆட்டமிழக்காது 52 ஓட்டங்களையும் பான்கிராப்ட் ஆட்டமிழக்காது 34 ஓட்டங்களையும் பெற்றனர். சிட்னி தண்டர் அணியின் பந்துவீச்சில், டேனில் சேம்ஸ், மெக் ஹென்ரிவ், சங்கா மற்றும் கட்டிங் ஆகியோர் தலா ஓர் இலக்கை வீழ்த்தினர்.

153 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய சிட்னி தண்டர் அணி 19.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகள் இழப்புக்கு வெற்றி இலக்கை அடைந்தது, 7 இலக்குகளால் சிறப்பான வெற்றியைப் பதிவுசெய்தது.

கெல்யும் பெர்குசன் ஆட்டமிழக்காது 61 ஓட்டங்களையும் ஒலீவர் டேவீஸ் 36 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். (ற-இ)

# கிரிக்கெட் வர்ணனையாளர் காலமானார்!

புதுடில்லி, டிசெ.23

பிரபல கிரிக்கெட் தமிழ் வர்ணனையாளர் அப்துல் ஜப்பார் உடல் நலக்குறைவால் நேற்றுக் காலமானார்.

வானொலியில் தமிழ் நாடு கேரளா ஆகிய அணிகளுக்கு இடையிலான ரஞ்சி போட்டியில் அப்துல் ஜப்பார் முதல்முறையாக வர்ணனை செய்தார். வானொலியில் அவரது வர்ணனையைக் கேட்ட பலரும் அவரது குரலுக்கு அடிமையாகினர். அதன்பின்னர் ஈ.எஸ்.பி.என், நியோ ஸ்போர்ட்ஸ் போன்ற விளையாட்டு அலைவரிசைகளிலும் தமிழ் வர்ணனை செய்துள்ளார்.

இவர் உடல் நலக்குறைவால் நேற்றுச் சென்னையில் காலமானார். அவருக்கு வயது 81. அவரது மறைவுக்கு பலரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.(ற-இ)




# சர்வதேச பூப்பந்தில் கலந்து கொள்வேன்!

## பி.வி.சிந்து உறுதி

புதுடில்லி, டிசெ.23

தாய்லாந்தில் நடைபெறும் சர்வதேச பூப்பந்துத் தொடரில் கலந்து கொள்வேன் என்று பூப்பந்து சம்பியனான இந்திய வீராங்கனை பி.வி.சிந்து தெரிவித்துள்ளார்.

பூப்பந்து சம்பியனான இந்திய வீராங்கனை பி.வி.சிந்து கடந்த ஒக்ரோபர் மாதம் முதல் இங்கிலாந்து தலைநகர் லண்டனில் தங்கி இருந்து பயிற்சி மேற்கொண்டு வருகின்றார், தனது உடல் தகுதியை மேம்படுத்த ஊட்டச்சத்து நிபுணரிடம் ஆலோசனை பெற்று அதற்கு தகுந்தபடி செயல்பட்டு வருகிறார்.

கொரோனாப் பரவல் காரணமாக மார்ச் மாதத்துக்கு பின்னர் எந்தவொரு போட்டியிலும் கலந்து கொள்ளாத சிந்து உள்பட 8 இந்திய வீர, வீராங்கனைகள் தாய்லாந்தில் அடுத்த மாதம் 12 ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை நடைபெறும் சர்வதேச பூப்பந்துத் தொடரில் கலந்து கொள்வார்கள் என்று இந்திய பூப்பந்துச் சங்கம் சமீபத்தில் அறிவித்தது.

தற்போது இங்கிலாந்தில் ஒரு வித புதிய வகை கொரோனா வைரஸ் பரவி வருகிறது. இதனால் இந்தியா உள்பட பல நாடுகள் இங்கிலாந்தில் இருந்து வரும் விமானங்களுக்கு தடை விதித்து இருக்கின்றன. இருந்த போதும் பி.வி.சிந்து சர்வதேச பூப்பந்துப் போட்டியில் கலந்து கொள்வேன் என்று உறுதியளித்துள்ளார். (ற-இ)

# ரகானேக்கு 4ஆவது இடம்

## கம்பீர் விருப்பம்

புதுடில்லி, டிசெ.23

அணித் தலைவர் ரகானே துடுப்பாட்டத்தில் நான்காவது வரிசையில் களமிறங்கி ஆட வேண்டும் என இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தொடக்க ஆட்டக்காரர் கௌதம் கம்பீர் தெரிவித்தார். இது தொடரபில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

மெல்போர்னில் நடக்கும் 2 ஆவது டெஸ்ட் போட்டியில் தொடக்க ஆட்டக்காரராக மயங்க் அகர்வாலுடன் இணைந்து சுப்மான் கில்லை பார்க்க ஆசைப்படுகிறேன். புஜாரா 3ஆவது வரிசையில் ஆடுவார்.

துடுப்பாட்டத்தில் 4 ஆவது வரிசையில் அஜிங்யா ரகானே ஆட வேண்டும். அவர் தொடர்ந்து 5 ஆவது வரிசையில் விளையாடுவதை பார்க்க விரும்பவில்லை. ஏனெனில் இப்போது அவர் பொறுப்பு அணித்தலைவர். அணியை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். அதனால் கோலி இடத்தில் ரகானே ஆட வேண்டும். 5 ஆவது வரிசையில் லோகேஷ் ராகுல், அடுத்து ரிஷப் பண்ட், 7 மற்றும் 8 ஆவது இடங்களில் ரவீந்திர ஜடேஜா, அஸ்வின் களம் காண வேண்டும். கடைசி 3 இடங்களில் வேகப்பந்து வீச்சாளர்கள் இருப்பார்கள். இந்த டெஸ்டில் 5 பந்து வீச்சாளர்கள் இடம் பெற வேண்டும் என்பதே எனது விருப்பம் - என்றார்.(ற-இ)